**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.6/2022**

**தேதி : 03.03.2026**

**(வா.சா.1) – திரு. தங்கராஜ்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)**

1. நான் விவசாயம் செய்கிறேன். கடன் வரவு செலவு செய்கிறேன். பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் அவர் பழனி ரயில்வே பீடர் ரோடில் கடை வைத்திருக்கிறார். நான் 12–ம் வகுப்பு படித்துள்ளேன். பிரதிவாதி என்னிடம் பணம் கடன் வாங்கியபோது 6 மாதத்தில் திருப்பிக் கொடுத்துவிடுவதாகச் சொன்னார். மேற்படி விபரங்களை எனது வழக்குரையில் கூறவில்லை. பிரதிவாதி எத்தனை முறை என்னிடம் கடன் வாங்கினார் என்றால் தாவா கடனுக்கு முன்பாக 4 வருடமாக என்னிடம் வரவு செலவு வைத்திருந்தார். கடன் கொடுத்துவிட்டு தினமும் வசூல் செய்வது வழக்கம் என்றால் தாவா கடன் மாத வட்டிக்குத் தான் கொடுத்தேன். பிரதிவாதியிடம் நான் முதலில் ரூ.2 லட்சம் கொடுத்ததாகவும், 8 மாதம் கழித்து ரூ.2 லட்சம் கொடுத்ததாகவும் கூறும் நிலையில் இடைப்பட்ட காலங்களில் பிரதிவாதியிடம் வட்டி எதுவும் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை.

2. மூன்றாவதாக கொடுத்த ரூ.2 லட்சத்திற்கு கொடுக்கவேண்டிய வட்டி போக மீதத் தொகையை கழித்துக்கொண்டேனா என்றால் வட்டியையும் சேர்த்து புதிய கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்டது. கடைசியாக கடன் கொடுத்த போது பிரதிவாதியிடம் எத்தனை கடனுறுதிச்சீட்டு வாங்கினேன் என்றால் ஏற்கனவே கொடுத்த கடன்களுக்கான கடனுறுதிச்சீட்டுகளை கிழித்துவிட்டு புதிதாக ஒரு கடனுறுதிச்சீட்டு மட்டும் எழுதி வாங்கினேன். பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். கடனுறுதிச்சீட்டை யார் வாங்கி வந்தது என்றால் பிரதிவாதி வாங்கி வந்தார்.

3. பணம் கொடுக்கும்போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் சிங்கராயர் என்பவரும், பிரதிவாதியும் உடனிருந்தார்கள். பிரதிவாதியே சிங்கராயரை அழைத்து வந்தார். நான் மட்டும் தான் என் வீட்டில் இருந்தேன். கடனுறுதிச்சீட்டை

யார் எழுதியது என்றால் சிங்கராயர் எழுதினார். பொதுவாக கடனுக்கு வட்டி தரவில்லை என்றால் அந்த நபருக்கு மீண்டும் கடன் கொடுக்கமாட்டோம் என்றால் சரிதான், பிரதிவாதி காண்ட்ராக்ட் ஒர்க் செய்து வருவதாகவும், அவருக்கு பில் தொகைக்கு பணம் வரவில்லை என்றும் என்னிடம் தெரிவித்தால் பணம் கொடுத்தேன். பிரதிவாதி என்ன காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் கொடைக்கானலில் சிவில் ஒர்க் செய்து வருவதாக என்னிடம் தெரிவித்தார்.

4. காசோலை கொடுத்த அன்றைய தேதியிலேயே பிரதிவாதி வங்கியில் பணம் எடுத்துக்கொண்டாரா என்றால் அவர் எப்போது பணம் எடுத்தார் என்று எனக்கு தெரியவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.03 18:23:35 +0530

Additional Sub Judge,
Palani.